**ELECTION URGENT**

## Tamil Nadu State Co-operative Societies Election Commission

**From**

Thiru. M. R. Mohan, I.A.S., (Retd.,)
Commissioner,
Tamil Nadu State Co-operative Societies
ElectionCommission, No. 273,
Anna Salai, Teynampet,
Chennai-600 018.

**To**

The Registrar Co-operative
Societies,
Chennai.

**Rc. 468/2013/CE-5** **Dated: 01.04.2013**

Sir,

Sub: Election – Election of the Members to the Boards and Office Bearers of Co-operative Societies – Education and Training of Voters – Issue of Posters – Regarding.

****

The Commission, with a view to educate the voters of Co-operative Societies to participate in large numbers in the Co-operative Elections and also to train them as to how to cast their votes, has proposed to bring out two posters (model posters enclosed) with matters as contained therein.

I request your kind cooperation in bringing out these posters also, as in the case of Hand Books brought out by the Commission, by arranging to print sufficient number of these posters by respective District Co-operative Union under your control and to distribute the same to the societies for prominent publicity and display.

It will be of immense help if the work is completed by 03.04.2013 as the first Polling date is 05.04.2013.

**Sd../- XXX**
**Commissioner**

Copy to:

The Observers for coordination

with the respective District Co-operative Unions.

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் – 2013

*****

# வாக்களிப்பது எப்படி?

**(1) உங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் இருத்தல் வேண்டும்.**

உங்களது உறுப்பினர் எண் அவ்வகையில் உதவிடும்.

(2) உங்களது அடையாளம் குறித்து ஐயம் ஏற்படும் நிலையில் அதைப் போக்கிட பொதுவில் தேர்தலில் ஏற்றுக் கொள்ளப்படும் ஏதேனும் ஓர் ஆவணம் உங்கள் வசம் இருப்பது நல்லது.

(3) வாக்குச் சாவடிக்குள் சென்றவுடன் உங்களுக்கு ஓர் வாக்குச் சீட்டு தரப்படும்.

(4) வாக்குச்சீட்டு பெற்றதற்காக உங்களது கையொப்பம்/கைரேகை வாக்காளர் பட்டியலில் உங்களது பெயருக்கெதிரே பெறப்படும்.

(5) வாக்களிப்பது பற்றியும், வாக்குச்சீட்டை மடித்து எவ்வாறு பெட்டியில் இடுவது என்பது பற்றியும் வாக்குச்சாவடி அலுவலர் உங்களுக்கு நன்கு விளக்கிடுவார்.

(6) உங்களுக்குத் தரப்படும் வாக்குச்சீட்டில் பின்வரும் விவரங்களும் இருக்கும்.

(1) சங்கத்தின் பெயர்

(2) வாக்குச் சீட்டின் வரிசை எண்

(3) பின்புறம் தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம்.

(7) வாக்குச் சீட்டில் மிக முக்கியமானது வேட்பாளரின் பெயர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண்களும்.

(8) நீங்கள் வாக்களிக்க விரும்பும் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்/வரிசை எண்களை முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டும்.

(9) பின்னர் தடுப்பறைக்குச் சென்று நீங்கள் வாக்களிக்க விரும்பும் வேட்பாளருக்கான வரிசை எண்ணுக்கு உரிய கட்டத்தில் –X- முத்திரை இடுங்கள்.

(10) நீங்கள் வாக்களிப்பது மிகவும் இரகசியமாக இருத்தல் அவசியம்.

(11) பின்னர் வாக்குச்சீட்டை முன்புபோல் மடித்து வாக்குப்பெட்டியில் போடுங்கள்.

(12) வாக்குப் பெட்டியில், வாக்குச்சீட்டினைத் தவிர ஏதேனும் பிற பொருட்களோ சீட்டுகளோ போடுதல் கூடாது. அவ்வாறு போடுவது குற்றமாகும். நாட்டின் முன்னேற்றத்திற்கு உங்கள் பங்கினை அளித்திட்ட மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் செல்லுங்கள்.

இன்ப வாழ்விற்கு  இணைந்த கரங்கள்

<u>வெளியீடு:</u>

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் – 2013

*****

# கூட்டுறவே நாட்டுயர்வு

# வாக்களிப்போம் வாருங்கள்

பெண்கள், ஆதி - திராவிடர், பழங்குடியினர், மற்றும் நலிந்தோர் முன்னேற்றத்திற்கும், பொதுவில், அனைத்து தரப்பினரின் சமுக மற்றும் பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், ஒவ்வொரு வகையில் உதவுகிறது.

நீங்கள் உறுப்பினராக உள்ள இக்கூட்டுறவுச் சங்கமும், அவ்வகையில் நீங்களும், நாட்டின் முன்னேற்றத்திற்கான பங்களிப்பைத் தருகிறீர்கள்.

எனவே இச்சங்கத்தின் நிர்வாகத்தை ஏற்க இருக்கும் உறுப்பினர்கள் தேர்தல் மிக முக்கியமானது அல்லவா**?**

**வாருங்கள்! உங்கள் வாக்கினை அளித்து உங்களது சிறப்பான பங்கினை ஆற்றிடுங்கள்!**

**வாழ்க கூட்டுறவு! வளர்க சமூக, பொருளாதார முன்னேற்றம்!**

**இன்ப வாழ்விற்கு இணைந்த கரங்கள்**

## வெளியீடு:

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்.**